**வலல்லாவிட பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 01 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வலல்லாவிட பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 02 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சற் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி விளக்கு மானியம் (1/72) பேரேட்டுக் கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 341,000 தொகைக்கும் இறுதி மீதியான ரூபா 71,500 தொகைக்கும் பொழிப்பு வருமானப் பதிவேட்டின் படி, பணப் பெறுவனவான ரூபா 939,500 தொகை சீராக்கப்பட்டதை அடுத்து ஆண்டின் பட்டியற்படுத்தல் ரூபா 670,000 ஆக இருக்க வேண்டிய போதிலும் ஆரம்ப மீதி ரூபா 370,000 ஆகப் பதிவு செய்யப்பட்டு தவறாக பட்டியலிடப்பட்ட பெறுமதி ரூபா 848,000 ஆக வருமானச் செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொழிப்பு வருமானப் பதிவேட்டின் படி நிகழ்ச்சித்திட்ட இல. 5 இன் வாடகை வருமானம் ரூபா 509,617 தொகையான போதிலும் வருமானச் செலவினக் கணக்கிற்கு ரூபா 5,187,234 ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பொழிப்பு செலவினப் பதிவேட்டின் படி 201 செலவின விடயத்தின் பணக் கொடுப்பனவான ரூபா 5,090,890 தொகைக்காக கடன்கொடுத்தோர் மீதி ரூபா 145,598 ஆக சீராக்கப்பட்டதை அடுத்து செலவினம் ரூபா 5,236,488 ஆன போதிலும் வருமானச் செலவினக் கணக்கிற்கு கடன்கொடுத்தோர்

மீதியான ரூபா 145,598 மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதன் படி, ஆண்டிற்கான செலவினம் ரூபா 5,090,890 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 304 செலவின விடயத்தின் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 406,005 ஆன போதிலும் பொழிப்பு செலவின பதிவேட்டிற்கு ரூபா 412,630 ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதன் படி, அச் செலவின விடயத்திற்குரித்தான விடயத்தின் செலவினம் ரூபா 2,145,698 ஆக வேண்டிய போதிலும் ரூபா 2,152,323 ஆக வருமானச் செலவினக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,178,457 தொகையான கப் வண்டியின் கடன் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அக் கடன் தொகைக்காக உள்ளூராட்சித் திணைக்களத்தால் சம்பள மீளளிப்பிலிருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 655,825 தொகையான தவணைப்பணம் சம்பள மீளளிப்புக் கணக்கு செலவு வைக்கப்பட்டு செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் சபையால் மூலதனச் சொத்து கடன்பட்டோர் (வாகனம்) ஆக கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு நிலுவையான ஏனைய வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மூலதனச் சொத்து கடன்பட்டோராகக் காண்பிக்கப்பட்டிருந்த செலவு பரீட்சை மீதியில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) பிரதான பேரேட்டின் படி, வேலைக் கடன்கொடுத்தோர் கணக்கினதும் 04 ஆம் இலக்க காசுக் கணக்கு மீதி முறையே ரூபா 115,319,299 ஆகவும் ரூபா 544,829 ஆகவும் காணப்பட்ட போதிலும் பரீட்சை மீதியில் முறையே ரூபா 115,438,959 ஆகவும் ரூபா 798,967 ஆகவும் காண்பிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(எ) முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத ரூபா 31,250 தொகை ஏப்ரல் மாதம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 164,032 தொகையான கடன்கொடுத்தோர் கொடுப்பனவில் உள்ளடக்கப்பட்டு கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியில் பல்வேறு கடன்கொடுத்தோர் மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் தொங்கல் கணக்கின் வரவு மீதி ரூபா 2,498,977 ஆகக் காணப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**(அ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 282,156,346 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.

**(ஆ) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிராமை**

ரூபா 31,253 கூட்டுத்தொகையான 16 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 2014 செப்தெம்பர் 18 ஆம் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,408,718 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,607,024 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 5,332 | 3,292 | 3,247 |
| (ii) | வாடகை | 10,476 | 9,383 | 811 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,400 | 133 | 6 |

### 2.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 132 (ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் சமய, புண்ணிய, கலாச்சார, சுகாதார, வினோத அல்லது கல்வி நடவடிக்கைக்காக ஒரு வருடத்திற்கான கூட்டுத்தொகை ரூபா 1,000 இனைப் பார்க்கிலும் கூடுமாயின் இதற்காக அமைச்சரின் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது மீளாய்வாண்டின் போது வெசாக் உற்வத்திற்காக ரூபா 87,216 தொகையும் கலாச்சார விழாவிற்காக ரூபா 34,000 தொகையும் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2013 சனவரி முதல் திசெம்பர் வரை தலைவரின் இல்லத் தொலைபேசிக்காக மாதாந்தம் ரூபா 3,000 படி ரூபா 36,000 தொகையும் உப தலைவரின் கையடக்கத் தொலைபேசிக்காக மாதாந்தம் ரூபா 2,500 படி ரூபா 30,000 தொகையும் குறித்த தொலைபேசிப் பட்டியல் பெற்றுக்கொள்ளப்படாது செலுத்தப்பட்டிருந்தது.

(iii) சபையின் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவியணியில் எவ்வித பற்றாக்குறையும் இல்லாத போதிலும் 2013 இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு பாதீடு தயாரிக்கப்படுவதற்காக ரூபா 16,900 தொகை வெளித்தரப்பினர் ஒருவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

**(அ) முற்பணத் தீர்ப்பனவு**

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் ஏதேனுமோர் செயற்பாட்டிற்காக வழங்கப்படும் முற்பணத் தொகை அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டு முதல் 2013 வரை வழங்கப்பட்டிருந்த ரூபா 233,940 தொகையான முற்பணம் கணக்காய்வுத் தினமாகிய 2014 செப்தெம்பர் 18 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வங்கிக் கணக்கிணக்கம்**

சபையின் 3 கணக்குகளுக்குரித்தான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று கணக்காய்வுத் தினமாகிய 2014 செப்தெம்பர் 18 ஆம் திகதி வரையிலும் 2014 மார்ச் மாதம் மற்றும் யூலை மாதம் வரை மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தன.

**(இ) கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள்**

நிதிப் பிரமாணம் 396(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த இரு நடைமுறைக் கணக்குகளுக்குரித்தான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத 06 மாதங்கள் கடந்த ரூபா 104,769 தொகையான 29 காசோலைகள் தொடர்பாக தொடர்புபட்ட நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) ஊழியர் பிணை**

பிணை வைக்கப்பட வேண்டிய 19 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(உ) ஊழியர் கடன்**

சபையின் சேவையில் ஈடுபட்டு இடமாற்றலாகிச் சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிச் சென்றிருந்த 7 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் தொகையான ரூபா 80,512 கணக்காய்வுத் தினமாகிய 2014 செப்தெம்பர் 18 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) களஞ்சியக் கட்டுப்பாடு**

2014 செப்தெம்பர் 11 ஆம் திகதி களஞ்சியப் பொருள் தெரிவொன்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது 03 இருப்பு விடயங்களில் 107 அலகுகளின் மிகையும் 03 இருப்பு விடயங்களில் 19 இன் பற்றாக்குறையும் காணப்பட்டது.

(எ) **இனங்காணப்பட்ட நட்டங்கள்**

சபையின் தற்காலிக மற்றும் அமைய ஊழியர்களுக்காகச் செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் குறித்த தினத்தில் செலுத்தப்பட்டிராத காரணத்தால் முறையே ரூபா 39,566 தொகையும் ரூபா 24,863 தொகையும் அந் நிதியத்திற்கு மிகை அறவீடாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**(ஏ) வாகன விபத்து**

சபைக்குரித்தான கெப் வாகனம் ஒன்று 2013 நவம்பர் 18 ஆம் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததுடன் வாகனப் பழுதுபார்ப்பிற்காக ரூபா 764,313 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 102 மற்றும் 104 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஐ)** ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், நானாவித வங்கி மற்றும் சங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டமைக்காக மீளாய்வாண்டின் மார்ச் மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரை சபை ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 519,079 தொகையும் சங்கம் மற்றும் ஏனைய அமைப்புகளுக்கு அனுப்பிவைக்கப்படுவதற்காக 2013 ஏப்ரல் முதல் மே வரை சபை உறுப்பினர்களின் படிப்பணத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 32,800 தொகையும் 2014 செப்தெம்பர் மாதம் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையிலும் உரிய நிறுவகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மனித வள முகாமைத்துவம்

(i) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கும் உள்ளபடியான பதவியணிக்கும் இடையே 06 பதவிகளில் 14 வெற்றிடங்களில் பற்றாக்குறை நிலவியது.

(ii) அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 06 வீதி ஊழியர்கள் சபையால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வாகனப் பயன்பாடு
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) பதவியணி நிர்வாகம்